பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.00

சுடர்: 6 | பிரமோதூத ஞூ மார்கழி 28 உ சனிக்கிழமை (12-01-1991) UTHAYAN - A LIVELY TAMIL NATIONAL DAILY கதிர்: 47

## அரச படைகளின் தாக்குதல் மீண்டும் ஆரம்பம்; ஆனால்

# யுத்த நிறுத்தத்தை தொடர்ந்து கடைப்பிடிக்க புலிகள் முடிவு!

## தற்பாதுகாப்பு நடவடிக்கைகளில் மட்டுமே அவர்கள் ஈடுபடுவார்கள்

யாழ்ப்பாணம், ஜனவரி 12

ஸ்ரீலங்கா அரசு அறிவித்திருந்த ஒருவார கால தாக்குதல் நிறுத்தம் நேற்று அதிகாலையுடன் முடிவடைந்ததை அடுத்து, அரச படைகள் நேற்று வடக்கு, கிழக்கில் தமது தாக்குதல்களைத் தொடங்கின.

எனினும் விடுதலைப் புலிகள் கடந்த முதலாம் திகதி முதல் தாங்கள் அறிவித்த காலவரையறையற்ற யுத்த நிறுத்தத்தைத் தொடர்ந்து கடைப்பிடிக்கப் போவதாக முடிவு செய்திருக்கின்றனர்.

அரச படைகள் தாக்குதல்களை நடத்தும் போது தற்காப்பு நடவடிக்கைகளில் மட்டும் விடுதலைப் புலிகள் ஈடுபடுவர் என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்று அதிகாலை முதல் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் பல இடங்களில் புலிகளைத் தேடிச் சென்று தாக்கும் முயற்சிகளில் அரச படைகள் ஈடுபட்டதைச் சுட்டிக்காட்டிய விடுதலைப் புலிகள் வட்டாரங்கள்—

எனினும் தாங்கள் தொடர்ந்து யுத்த நிறுத்தத்தை உரிய முறையில் கடைப்பிடிக்கப் போவதாகத் தெரிவித்தன. (உ)

## தாக்குதலை ஆரம்பித்ததற்கு அரசு கூறும் காரணங்கள்

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு எதிரான இராணுவத் தாக்குதல் இடை நிறுத்தத்தை நீடிப்பதில்லை என்று ஸ்ரீலங்கா அரசு முடிவு செய்துள்ளது.

இது தொடர்பாக அரசின் உத்தியோகபூர்வ அறிவிப்பு—ஒரு வார கால தாக்குதல் இடை நிறுத்தம் நேற்று அதிகாலை 12 மணிக்கு முடிவடைந்து சரியாக 12 மணி நேரத்தின் பின்னர் - வெளியானது.

அரசின் முடிவிற்கான காரணங்களை தெரிவிக்கும் அறிக்கை ஒன்று நேற்று நண்பகலில் அரசுசார்பு தொலைத் தொடர்பு சாதனங்கள் மூலம் வெளியிடப்பட்டது.

அரசு அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

விடுதலைப் புலிகள் தாம் ஒருதலைப்பட்சமாக பிரகடனம் செய்த யுத்த நிறுத்தத்தைத் தொடர்ந்து வி...

[2ஆம் பக்கம் பார்க்க]

## மீண்டும் சகடை, அவ்ரோ, பொம்மர்

# இயக்கச்சி, குறிஞ்சாத்தீவு பகுதிகளில் நேற்றுக் காலை குண்டுவீச்சு!

## கடைகள், பாடசாலை கட்டடங்கள் சேதம்

தென்மராட்சி, ஜன. 12

இயக்கச்சி, குறிஞ்சாத்தீவுப் பகுதிகளில் நேற்றுக் காலை சீனச் சகடை, அவ்ரோ, பொம்மர் விமானங்கள் மாறி, மாறி குண்டுகளை வீசித் தாக்கின.

நேற்றுக் காலை 7 மணி தொடக்கம் 9 மணி வரை நடந்த இந்தத் தாக்குதல்களினால் இயக்கச்சி, குறிஞ்சாத்தீவு பகுதிகள் மட்டுமன்றி அவற்றை அண்டிய பகுதிகள் எங்கும் அதிர்ந்தன.

குண்டு வீச்சினால் இயக்கச்சிச் சந்தியிலுள்ள 4 கடைகளும் இயக்கச்சி மகாவித்தியாலய கட்டடங்களும் பலத்த சேதமடைந்தன. இயக்கச்சிச் சந்தையில் நின்ற இருவர்

(3ஆம் பக்கம் பார்க்க)

## ராணுவத்தின் முடிவுக்கு ஜனாதிபதி பணிந்தார்

கொழும்பு, ஜன. 12

இராணுவத் தாக்குதல் இடை நிறுத்தத்தை மேலும் பரீட்சார்த்தமாக நீடிக்க வேண்டும் என்று ஜனாதிபதி பிரேமதாஸாவை பல கட்சிகள் கோரியிருந்தன.

ஆனால் இடை நிறுத்தத்தை மேலும் நீடிக்கக் கூடாது என்ற இராணுவத்தின் நிலைப்பாடே இறுதியில் ... அதற்கு இணங்கவே இரா...

(2ஆம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவில்

ஆனையிறவு முகாம் பகுதியில் உள்ள விடுதலைப் புலிகளின் காவல் அரண்கள் மீதும் நேற்று அரச படைகள் பெரும் தாக்குதல்களைத் தொடுத்தன.

காலை 6 மணி முதல் 7 மணி வரை மூன்று பொம்மர்களும், அவ்ரோ ஒன்றும் மாறி மாறி இப்பகுதியில் குண்டு மாரி பொழிந்தன.

இப்பகுதியில் கடும் ஷெல் தாக்குதல்களும் நடத்தப்பட்டன. [உ-6]

## பலாலிப் பகுதியில்

யாழ்ப்பாணம், ஜன. 12

நேற்றுக் காலையில் கட்டுவன், குரும்பசிட்டிப் பகுதிகளில் உள்ள விடுதலைப் புலிகளின் காவல் அரண்கள்மீதும் படையினர் பல தடவைகள் தாக்குதல் நடத்தியதாகத் தெரியவருகிறது.

தமது முகாம் பகுதிகளில் இருந்து ஷெல் தாக்குதல் மற்றும் துப்பாக்கிப் பிரயோகங்களை நடத்தியவாறு முன்னேறிய இராணுவத்தினர் விடுதலைப் புலிகளின் பல காவல் அரண்களை நோக்கி பெரும் தாக்குதல்களைத் தொடுத்தனர்.

காலை 6.30 மணியளவில் இடம்பெற்ற தாக்குதலில் வைதேகி என்ற பெண் போராளி காயமுற்றார்.

(3ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில்

யாழ்ப்பாணம், ஜன. 12

வவுனியா பகுதியிலும் நேற்று அதிகாலை முதல் படையினரின் தாக்குதல் நடவடிக்கைகள் இடம்பெற்றன.

நேற்று அதிகாலை 2மணி முதல் இராணுவ முகாம் மற்றும் காவல் அரண்களில் இருந்து வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

காலை ஐந்து மணியளவில் நகரில் உள்ள காமினி வித்தியாலய இராணுவ முகாமிலிருந்து கடும் துப்பாக்கிப் பிரயோகங்களை மேற்கொண்டவாறு வெளியேறிய படையினர், வவுனியா

[3ஆம் பக்கம் பார்க்க]

## முல்லைத்தீவில்

யாழ்ப்பாணம், ஜன. 12

நேற்றுக் காலை 6.30 மணியளவில் முல்லைத்தீவு இராணுவ முகாம் அமைந்துள்ள சூழலில் இரு போர் விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

அதேசமயம் கடலில் தரித்து நின்ற கடற்படையினரின் படகுகளில் இருந்து பீரங்கித் தாக்குதல்களும் நடத்தப்பட்டன.

விமானக் குண்டு வீச்சு, கடல் பீரங்கித் தாக்குதல் ஆகியவற்றின் உதவியோடு முல்லைத்தீவு இராணுவ முகாமிலிருந்து வெளியேற முயன்ற இராணுவத்தினர், அப்பகுதியில் இருந்த விடுதலைப்புலிகளின் நிலைகளை நோக்கி கடும் தாக்குதல்களையும் நடத்தினர்.

பின்னர் அவர்கள் முகாமுக்குத் திரும்பிச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## மன்னாரில்

யாழ்ப்பாணம், ஜன. 12

நேற்றுக் காலை 6.30 மணியளவில் மன்னார் மாவட்டம் தள்ளாடி இராணுவ முகாமிலிருந்து வெளியேறிய இராணுவத்தினர் சுமார் ஒரு மைல் தூரத்துக்கு அப்பால் உள்ள விடுதலைப் புலிகளின் காவல் அரணை நோக்கி கடுமையான ஷெல் மற்றும் பீரங்கித் தாக்குதலை நடத்திய வண்ணம் முன்னேறினர்.

புலிகளின் தற்பாதுகாப்புத் தாக்குதல்களை அடுத்து படையினர் முகாமுக்குத் திரும்பிச்சென்றதாகத்தெரிய வந்தது. [உ]

## நெடுந்தீவில்

ஸ்ரீலங்கா அரசின் தாக்குதல் நடவடிக்கை நிறுத்தம் அமுலில் இருந்த வேளை - நேற்று முன்தினம் நண்பகல் 11 மணியளவில்-நெடுந்தீவில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் மீது கடற்படையினர் நடத்திய தாக்குதலின் விளைவாக கப்டன் மாஸ்டர் [பிரதாப் மனோ - பருத்தித்துறை] என்ற போராளி வீரமரணமடைந்தார். (உ)

## இந்திய அரசு பரிசீலனை செய்கிறதாம்

சென்னை, ஜன. 12

அஸாம், ஐக்கிய விடுதலை முன்னணி தீவிரவாதிகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் உள்ள உறவு பற்றி மத்திய அரசு பரிசீலனை செய்து வருகிறது.

இப்படி மத்திய உள்துறை இணை அமைச்சர் சுபோத்கான் சஹாய் சென்னையில் நேற்றுத் தெரிவித்தார். [ஓ-எ]

## மரண தண்டனை

காங்கேசன்துறை, ஜன 12

சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டதாகக் கூறப்படும் கோப்பாய் வடக்கு இராச வீதியைச் சேர்ந்த அப்பாக்குட்டி தனபாலு [43 வயது] என்பவருக்கு நேற்று மருதனார் மடம் சந்தியில் வைத்து விடுதலைப் புலிகளால் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. (ஓ-68)

## உயிருடன் எரிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 12

கடந்த திங்களன்று காலை 10 மணிக்கு மண்டூரிலிருந்து கல்முனை ஆஸ்பத்திரிக்குச் சென்ற கண்ணமுத்து தினகரத்தினம்என்பவரை இராணுவத்தினர் உயிருடன் டயர் போட்டு எரித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## சுக்லா எம். பி. பதவி இழந்தார்

புதுடில்லி, ஜன. 12

இந்திய வெளிவிவகார அமைச்சர் வித்யாசரண் சுக்லா உட்பட ஐந்து அமைச்சர்களும் மற்றும் மூன்று பேரும் தமது எம். பி. பதவிகளை நேற்று இழந்தனர்.

இந்தியாவின் கட்சித்தாவல் தடைச் சட்டத்தின் கீழ் இவர்கள் அனைவரும் தமதுஎம்.பி. பதவிகளை இழந்ததாக இந்திய நாடாளுமன்றத்தில் சபாநாயகர் ரபிராய் நேற்றிரவு அறிவித்தார்.

அதே வேளை—

பிரதமர் சந்திரசேகர், துணைப்பிரதமர் தேவிலால் உட்பட 54 எம். பிக்கள்

[3ஆம் பக்கம் பார்க்க]

## முச்சந்தி முரளி



இலங்கைக்கு பேச்சு நடத்த வராததற்கு திகதி நிர்ணயிக்கிற வெளியுறவு அமைச்சர்கள் பாடு அதோ கதிதான் போலை......!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

யாழ். பிரிவு

புதிதாக அமைக்கப்பட்ட எமது பயிற்சி, சுதேசிய பொருள் விற்பனை நிலையங்கள் திங்கட்கிழமை [14 - 01 - 1991] காலை 11 30 மணிக்கு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படும்.

எமது சங்க அங்கத்தவர்கள், தொண்டர்கள், அனைவரையும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

[C 564]. —தலைவர்

# மரண அறிவித்தல்கள்

## குழந்தைவேலு - வல்லிபுரம் (காந்தி அண்ணை)

வயாவிளானைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய திரு. கு. வல்லிபுரம் 10 - 1 - 1991 வியாழக்கிழமை சிவபதமடைந்து விட்டார். இவர் காலஞ்சென்ற குழந்தைவேலு, காலஞ்சென்ற சின்னாச்சிப்பிள்ளை ஆகியோரின் புத்திரனும், அன்னலட்சுமியின் அன்புக்கணவரும், திருமதி க. முத்துப் பிள்ளையின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை, காலஞ்சென்ற அப்பாப்பிள்ளை, காலஞ்சென்ற கதிரித்தம்பி, பொன்னம்பலம் [ஓய்வூதியர்], அழகர், திருமதிகள் அருமைப்பிள்ளை, சதிராசிப்பிள்ளை, இரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், விவேகானந்தன் [கனடா], விஜயலட்சுமி (துறைவரித்திணைக்களம்), ஞானலட்சுமி, ஜெயலட்சுமி, மகாலட்சுமி, (ஜேர்மனி), விபுலானந்தன் (கனடா), [சர்வலட்சுமி (லண்டன்) ஆகியோரின் அன்புத்தந்தையும், ஜயந்தி [கனடா], சோமசேகரம் [பட்டதாரி], துரைரத்தினம் (பிரான்ஸ்), மகாலிங்கம் [தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்], சத்தியசீலன் [ஜேர்மன்], ராகவன் (லண்டன்] ஆகியோரின் அன்பு மாமனாரும், தமிழினி, பிரணவன், திருபா, சேயோன், ஆதிசன், ஆருரன, திருவரங்கன், பிரார்த்தனா, கீர்த்தனா, ஜனகா, தேனுகா ஆகியோரின் அன்புப்பாட்டனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 11 – 01 – 1991 வெள்ளிக்கிழமை நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
வ. மகாலிங்கம் (மருமகன்)

"திருச்செந்தூர்",
நாவலடி லேன்,
திருநெல்வேலி வடக்கு. [15494]

## நாராயணபிள்ளை செல்லத்துரை

(வெற்றிலைச் சாத்திரி)

பொன்னாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தொல்புரத்தில் வசித்தவரும் ஆகிய நாராயணபிள்ளை செல்லத்துரை (வெற்றிலைச் சாத்திரி) 11-01-91 வெள்ளிக்கிழமை அன்று காலமாகி விட்டார். இவர் அன்னமுத்துவின் அன்புக்கணவரும், மனோகரி, துரைரட்ணம், கனகநாதன், மங்களேஸ்வரி, நாராயணமூர்த்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், கனகரத்தினம், நவம், ரங்கா, ஜெயக்குமாரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் சுதர்சன், பார்த்தீபம், கார்த்திகா, திவ்யன், லஷ்மன், சதீஸ், றிவிவ், ராதிகா, சோபிகா ஆகியோரின் அன்புப் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 12 - 01 - 1991 சனிக்கிழமை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பொன்னாலை மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
கா. ஜெயக்குமார். (மருமகன்)

தொல்புரம் மேற்கு,
சுழிபுரம். (15217)

## வை. குமாரசுவாமி

[முன்னாள் அதிபர்,
சேர். துரைசுவாமி வித்தியாசாலை புங்குடுதீவு]

புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட வைத்திலிங்கம் குமாரசுவாமி அவர்கள் 11-1-1991 இல் காலமாகிவிட்டார். அன்னார் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், பத்மாவதி, பத்மலீலா [சுவிஸ்], பத்மராணி [ஜேர்மனி], சந்திரன் [கிராமசேவை அலுவலர், புங் / கிழக்கு], மனோகரன், பத்மஞானம் ஆகியோரின் அன்புத் தந்தையும், காசிநாதர் [மாருதி வாகன உரிமையாளர்]. லோகநாதன் [சுவிஸ்], பஞ்சலிங்கம் [ஜேர்மனி], பிறேமாவதி, யோகச்செல்வி, யோகலிங்கம் ஆகியோரின் மாமனாரும் காலம் சென்ற தர்மராசா, சின்னராசா, திருநாவுக்கரசு, இராசையா [கட்டிடத் திணைக்களம்] ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்தில் இருந்து 12-1-91 (இன்று) சனிக்கிழமை பி. ப. 4 மணிக்கு சேமதீவு மயானத்திற்கு ஈமக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

உற்றார், உறவினர் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
V. S. சிவலிங்கம்

பத்மவாசம்,
4 ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு. [15219]

# படை அதிகாரிகள் இந்தியாவில் பயிற்சி

## கடந்த வாரம் சென்றனர்

கொழும்பு, ஜன. 12

இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த பிரிகேடியர் தலுவத்தையும், கடற்படைக் கொமடோர் மோகன் சமரசேகராவும் புதுடில்லியில் தேசிய பாதுகாப்புக் கல்லூரியில் ஒரு வருடப் பயிற்சி பெறுவதற்காக கடந்த வாரம் இந்தியா சென்றனர்.

பிரிகேடியர் லக்கி அல்கம இராணுவப் பயிற்சி பெறுவதற்காக பாகிஸ்தானுக்கு ஏற்கனவே சென்றுள்ளார். [ஓ-எ]

# எதிரணிகள் தெற்கில் எதிர்ப்புப் பேரணி!

கொழும்பு, ஜன. 12

அடிப்படை மனித உரிமை மீறல் மற்றும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு ஆகியவற்றை எதிர்த்து எதிர்க்கட்சிகள் தென்பகுதியில் பேரணி, சத்தியாக்கிரகம் ஆகியவற்றை நடத்த திட்டமிட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

முதல் கட்டமாக இம்மாத இறுதியில் அல்லது பெப்ரவரி முற்பகுதியில் ஒரு லட்சம் பேர் கலந்து கொள்ளும் பேரணி நடத்தப்படும் என்று தெரிகிறது.

மலைநாட்டில் சத்தியாக்கிரகம் ஒன்றை நடத்தவும் திட்டமிடப்பட்டு உள்ளது. (உ-எ)

# தாக்குதலை ஆரம்பித்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வருவதால் தாக்குதல்கள் இடை நிறுத்தத்தை மேலும் நீடிக்க முடியாத ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது.

அரசின் தற்காலிக தாக்குதல் இடை நிறுத்தம் வியாழன் நள்ளிரவுடன் முடிவடைந்தது.

அரசாங்கம் அதனிடம் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் அனைத்தையும் கவனமாக பரிசிலனை செய்தும், நிலைமைகளை மதிப்பீடு செய்தும் இந்த முடிவை எடுத்துள்ளது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் இராணுவப் பிரிவுத் தலைவர் திரு. பிரபாகரனை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளை மீண்டும் நடத்துமாறும் அரசாங்கம் கேட்டுக் கொள்கிறது.

இத்தகைய பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதற்கு முன்னர் சட்டப்படி அனுமதியளிக்கப்பட்ட இயக்கங்களைத் தவிர, வேறு எந்த இயக்கமும் ஆயுதங்கள் வைத்திருப்பதற்கும் பயன்படுத்துவதற்கும் தடைவிதிக்கும் பிரகடனம் செய்யப்பட வேண்டும்.

இத்தகைய பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்வதற்கு சகல அரசியல் கட்சிகளும் அழைக்கப்படும். விடுதலைப் புலிகள் இந்த நிபந்தனையின் அடிப்படையில் பேச்சுவார்த்தைகளுக்கு விடுக்கப்படும் அழைப்பை ஏற்றுக் கொண்டால் அவர்களுக்கு எதிரான தாக்குதல்களை இடை நிறுத்தி வைப்பதற்கு அரசாங்கம் தயாராக இருக்கிறது.

எனினும், தைப்பொங்கல் தினமான எதிர்வரும் 14 ஆம் திகதி வடக்கு - கிழக்கு பகுதிகளில் தாக்குதல் நடவடிக்கைகளை இடைநிறுத்தி வைப்பது என்று அரசாங்கம் தீர்மானித்து இருக்கிறது.

விடுதலைப் புலிகள் சகல பணயக் கைதிகளையும் விடுதலை செய்வதுடன், இனிமேலும் எவரையும் கடத்திச் சென்று பணயம் வைத்திருக்கக் கூடாது என்று அரசாங்கம் கேட்டுக்கொள்கிறது.

பணயமாக வைக்கப்பட்டுள்ளவர்கள் மற்றும் கைதிகளை துன்புறுத்துவதையும், அவர்களுக்கு மரண தண்டனை நிறைவேற்றுவதையும் நிறுத்திக் கொள்ளவேண்டும்.

கண்ணி வெடிகளை அகற்றுவதற்கு பொது மக்களைப் பயன்படுத்துவதையும் நிறுத்திக் கொள்ளவேண்டும்.

அப்பாவிச் சிறுவர்களையும் குடிமக்களையும் சண்டையிடுவதற்காக இயக்கத்தில் சேர்த்துக் கொள்வதை விடுதலைப் புலிகள் கைவிட வேண்டும் என்று அரசாங்கம் கேட்டுக் கொள்கிறது.

பொதுமக்களுக்கு எதிரான பழிவாங்கல் நடவடிக்கைகளையும் நிறுத்திக்கொள்ள வேண்டும்.

பொது மக்களின் ஆதரவைப் பெறும் பொருட்டு, அவர்களை வற்புறுத்தும் சகல நடவடிக்கைகளையும் நிறுத்தி விடவேண்டும்.

கடந்த 10 தினங்களாக விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை அரசு உன்னிப்பாகக் கவனித்து வந்தது.

நேற்று (வியாழன்) வரை விடுதலைப் புலிகளின் 34 யுத்த நிறுத்த மீறல் சம்பவங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இவற்றில் பெரும்பாலானவை உயிரிழப்புகளை ஏற்படுத்திய பாரதூரமான யுத்த நிறுத்த மீறல் சம்பவங்களாக இருந்தன.

பதுங்கு குழிகளை அமைத்தல், விடுதலைப் புலிப் போராளிகள் மீளத் திரள்தல் போன்ற பல சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

இந்த பதிப்பீட்டின் அடிப்படையில் விடுதலைப் புலிகள் சமாதானத்தை விரும்பும் நேர்மையான நோக்கத்துடன் யுத்த நிறுத்தப் பிரகடனத்தைச் செய்யவில்லை என்று அரசு கருதுகிறது.

ஆனால் மோசமான முறையில் சிதறிக் கிடக்கும் இயக்கத்தினரை மீண்டும் திரட்டிக் கொள்வதற்கான கால அவகாசத்தைப் பெற்றுக் கொள்ளும் ஓர் உத்தியாகவே இது அரசுக்குப் புலப்படுகிறது.

இந்த மாதம் 9 ஆம் திகதியிடப்பட்ட அறிக்கை ஒன்று விடுதலைப் புலிகளிடமிருந்து அரசுக்குக் கிடைத்தது.

அரசினால், தாக்குதல் நடவடிக்கை இடைநிறுத்தப்படுவதற்கு விதித்துள்ள நிபந்தனைகள் நியாயமற்றவை என்று அவர்கள் கூறுகிறார்கள். அரசாங்கம் அதன் தாக்குதல் நடவடிக்கையை 7 நாட்களுக்கு இடைநிறுத்தி வைத்தமை விடுதலைப் புலிகளின் அறிவிப்பு நேர்மையானதா, இல்லையா என்பதை அறிந்து கொள்வதற்கே ஆகும்.

இந்தக் காலப் பகுதியில் பொதுமக்களின் பாதுகாப்புக் கருதியும் சட்டத்தினையும் ஒழுங்கினையும் பேணுவதற்காகவும் ரோந்து மேற்பார்வைகளை மேற்கொள்வது அவசியமாக இருந்தது. சட்டபூர்வமாக தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் சிவில் நிர்வாகத்தையும் பிராந்திய ஒருமைப்பாட்டையும் பேணுவதற்கு எடுக்கப்பட்ட ஆகக் குறைந்த பட்ச நிபந்தனைகள் இவையாகும்.

இவ்வாறு அரசாங்கம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

## ராணுவத்தின் முடிவுக்கு.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ணுவத் தாக்குதல் இடை நிறுத்தத்தை நீடிப்பது இல்லை என்று ஜனாதிபதி முடிவு செய்தார் என்று பி. பி. ஸியின் கொழும்புச் செய்தியாளர் தெரிவித்தார்,

# 21ம் நாள் நினைவு தினம்

தோற்றம்:
5-2-1901

மறைவு:
23-12-1990



## திருமதி விசாலாட்சி நாகலிங்கம்

பெற்று வளர்த்துப் பேணிக் காத்த தெய்வமே! திருநிறை செம்மையே செம்மை என்று வாழ்ந்தாய், வழி காட்டினாய், வழிவந்தவர்களை வாழ்த்தினாய், கடமை முடிந்தது. காண்பரிய கருணைச் சிவன் பேறு பெற்றாய். வணங்குகின்றோம் நின் கருணை எம்மைக் காக்க.

சகோதரர், மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்
புங்குடுதீவு: 11

நா. சிவபாதன், டிப்டொப்கடை,
நாவலர் றோட், யாழ்ப்பாணம். (15499)

# மரண அறிவித்தல்கள்

## வின்சிலோ விஜயரட்ணம்

[Retired Assistant Commissioner of Labour]

வின்சிலோ விஜயரட்ணம் 10-01-91 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற ரோஸ் அமிமலரின் கணவரும், தயா [Germany], ஆனந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை இன்று சனிக்கிழமை [12-1-91] காலை 9 மணிக்கு உடுவில் டச் வீதியில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உறவினர்களும், நண்பர்களும், அன்பர்களும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
R. தனபாலசிங்கம்.

உடுவில் மேற்கு,
சுன்னாகம். [15218]

## கணபதிப்பிள்ளை அருணாசலம்

கொடிகாமம் அருணாசலம் மோட்டோர் ஸ்ரோர்ஸ் உரிமையாளர் கணபதிப்பிள்ளை அருணாசலம் காலமாகிவிட்டார். இவர் வள்ளியம்மாளின் அருமைக் கணவரும், நடேசனின் அன்புத் தந்தையும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று நண்பகல் 12 மணிக்கு வேவில் மயானத்தில் நடைபெறும். உற்றார், உறவினர்கள் இவ்வறிவித்தலை ஏற்கும்படி கேட்கப்படுகின்றார்கள்.

தகவல்:
அ. நடேசன் (மகன்)

பெரியநாவலடி, கொடிகாமம்.

## மருதப்பு கைலாசபிள்ளை (இரத்தினம்)

(பிரபல பழவியாபாரி, யாழ். மார்க்கட்)

வேலணை மேற்கைச் சேர்ந்தவரும் யாழ்ப்பாணம் பிறவுண் வீதி, 2ஆம் ஒழுங்கையை வசிப்பிடமாகக் கொண்டவருமான மருதப்பு கைலாசபிள்ளை (இரத்தினம்) நேற்றுக் காலமானார்.

இவர் கண்ணம்மாவின் அன்புக் கணவரும், புஷ்பமாலா, ஸ்ரீசாந்தன (மீனாம்பிகை ஜவுளி சமுத்திரம்], இரஞ்சிதமாலா, ஸ்ரீதரன், ஜீவமலர், ஸ்ரீவரதன் (சிகமா பம்ஸ்), ஸ்ரீபாலன் [ஜேர்மனி] ஜெயமாலா ஆகியோரின் அன்புத் தந்தையும், இரத்தினவேலன் [தொலைத் தொடர்பு திணைக்களம், திருமலை], வசந்தா, கலாராணி, விஜயலலிதா ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரின் ஈமச் சடங்குகள் இன்று மாலை 4 மணிக்கு பிறவுண் வீதி இல்லத்தில் நடைபெற்று இறுதிக் கிரியைக்காக பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
பிள்ளைகள்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி 202/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 12 - 1 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## அறிகுறி நல்லதல்ல

அரசாங்கம் தனது ஒரு வார கால தாக்குதல் நிறுத்தத்தை நீடிப்பதில்லை என்று நேற்று நண்பகல் உத்தியோக பூர்வமாக அறிவித்தது.

தாக்குதல் நிறுத்தத்தை நீடிக்க வியாழன் நள்ளிரவு கூடிய மந்திரிசபை முடிவு செய்ததாக முன்னர் வந்த தகவல்கள் தெரிவித்தனவாயினும், உத்தியோகபூர்வ அறிவிப்பு அதற்கு நேர் மாறாக அமைந்துவிட்டது. மீண்டும் வன்செயலுக்கு வழிகோலப்பட்டிருக்கிறது.

அரசின் முதற்கட்ட தாக்குதல் நிறுத்தம் இரண்டாவது கட்டத்திலாவது யுத்த நிறுத்தமாக மாறும் என்று அரசியல் அவதானிகள் கருதவில்லை; எதிர்பார்த்திருக்கவில்லை. அரசின் பொறுப்பு வாய்ந்த தலைவர்களின் பேச்சும் போக்கும் அதற்குப் பாதகமானதாக, குழப்பும் தொனியில் அமைந்திருந்ததே சந்தேக நிலைக்குக் காரணமாக இருந்தது.

ஆனால், அவலப்பட்ட வடக்கு கிழக்குத் தமிழ் மக்கள் மட்டுமன்றி, தென்னிலங்கை வாழ் மக்களும், மக்கள் நலனில் அக்கறை உள்ள பிரமுகர்கள் பலரும், அரசாங்கமும் காலவரையற்ற யுத்த நிறுத்தம் ஒன்றைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று விரும்பினார்கள்.

சமூக, சமய நிறுவனத்தின் தலைவர் வண. பிதா திஸ்ஸ பாலசூரியா போன்ற, அரசியல் லாபத்தில் நாட்டமில்லாத சுயேச்சைப் பிரமுகர்கள் வெளியிட்ட அறிக்கைகள் அதனையே பிரதிபலித்தன.

நீண்ட காலமாக இழுபட்டு வரும் தமிழர் பிரச்சினைக்கு இதுவரை தீர்வு காணப்படாமல் இருப்பதற்கு மாறி மாறிப் பதவியில் இருந்த ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியுமே பொறுப்பு என்பதை அவர்கள் வெளிப்படையாகச் சொல்லத் தொடங்கி விட்டனர்.

இராணுவப் போராட்டத்தால் தமிழர் பிரச்சினையை 17 வருடங்களாகத் தீர்க்க முடியவில்லையே; இனியாகுதல் அரசியல் வழி மூலம் தான் தீர்வு உண்டு என்பதை உணர்ந்து செயற்பட வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரமுகர்களும் கூற ஆரம்பித்துள்ளனர்.

ஒற்றையாட்சி அமைப்பின் கீழ் அல்லாது சமஷ்டி ஆட்சி அரசமைப்பை உருவாக்குவதன் மூலமே தமிழர்களின் உரிமைகளை பயனுள்ள முறையில் வழங்க முடியும் என்று லிபரல் கட்சித் தலைவர் கலாநிதி சாணக்க அமரதுங்க போன்றோர் யதார்த்த நிலையை வெளிப்படையாக, கட்சிகள் மாநாட்டில் தெரிவிக்கத் தொடங்கி விட்டனர்.

இத்தகைய ஒரு சூழ்நிலையிலும், பிரதான எதிர்க் கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சி, பேச்சுவார்த்தைக்குச் சாதகமான நிலைப்பாட்டைக் கடைப்பிடிக்கவில்லை. அரசாங்கம் செய்ய நினைப்பதையும் குழப்பும் தோரணையில் செயற்பட்டு வருகிறது.

அரசாங்கமும் மீண்டும் இராணுவ வழியையே நாடியிருக்கிறது.

இது நல்ல அறிகுறி அல்ல. நாட்டைச் சூழ்ந்துள்ள இருள் அகலும் என்று எதிர்பார்ப்பதற்கு எதுவுமே தென்படவில்லை.

# கட்டாக்காலிக் கால்நடைகள்: கட்டுப்படுத்த நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 12

நெல் வயல்களில், அல்லது ஏனைய தோட்டங்களில் பயிர்களை மேயும் கால்நடைகள், கட்டாக்காலியாக பொது இடங்களில் உலாவும் கால்நடைகள் ஆகியன கட்டுப்படுத்தப்படாவிடில் அவற்றைக் கட்டுப்படுத்தும் விதிகள் 01 - 12 - 1990 முதல் அமுலிற்குவந்துள்ளன. இதற்கான சுற்று நிருபம் ஏற்கனவே கிராமிய உற்பத்தி குழுக்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தமிழீழ ஆய்வு நிறுவனம் விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

ஒவ்வொரு கிராமிய உற்பத்திக் குழுவிலிருந்தும் ஐந்து பேர் கொண்ட குழு கால்நடைகளை கட்டுப்படுத்துவதற்காக தெரியப்படும்.

தோட்டக்காரரோ, கால்நடை பிடிப்போரோ இக்கட்டாக்காலி கால்நடைகளைப் பிடிக்கலாம்.

பிடிக்கப்பட்ட கால்நடைகள் மேற்படி தெரிவு செய்யப்பட்ட குழுவிடம் ஒப்படைக்க வேண்டும். இக்குழு பகிரங்கமாக அமைக்கப்பட்ட பராமரிப்பு இடத்தில் கால்நடைகளைப் பராமரிக்கும்.

மாடு ஒன்றிற்கு 10 ரூபாவும், ஆடு ஒன்றிற்கு 5 ரூபாவும் நாளாந்த பராமரிப்புச் செலவாக அறவிடப்படும்.

கால்நடைகளைப் பிடிப்பவர் குழுவிடம் கால்நடைகளை ஒப்படைத்தபின், கால்நடையின் சொந்தக்காரருக்குக் குழுவின் செயலாளர் அறிவிப்பார்:

கால்நடையால் ஏற்பட்ட சேதப் பெறுமதி, கால்நடை பிடிபட்ட இரண்டு நாட்களுள் உரியவரிடம் பெறப்பட்டு கால்நடைகள் கையளிக்கப்படும். சேத மதிப்பீடு, குழுவினால் மதிப்பிடப்படும்.

2 நாட்களுள் உரியவருடன் தொடர்பு கொள்ள முடியாவிடில் அதன் நிறம், குறி, வயது, பால் ஆகிய விவரங்களுடன் பிரசித்த அறிவிப்பு செய்யப்படும்.

பிரசித்த அறிவிப்பின் பின்னரும் உரியவர் கண்டுபிடிக்கப்படாவிடில் 10 நாட்களின் பின் பகிரங்க ஏலத்தில் கால் நடைகள் விற்கப்படும்.

ஏலத்தின் மூலம் பெறப்படும் பணத்தில் செலவு கழிவு மீதி தமிழீழ ஆய்வு நிறுவனத்திற்குச் சேரும்.

பிடிகாரர் மாடு ஒன்றிற்கு 50 ரூபாவும், ஆடு ஒன்றிற்கு 25 ரூபாவும் கூலியாகப் பெறுவர். குற்றப்பணமாக மாடு ஒன்றிற்கு 50 ரூபாவும், ஆடு ஒன்றிற்கு 25 ரூபாவும் செலுத்தப்பட வேண்டும்.

இப்படி தமிழீழ ஆய்வு நிறுவனம் அறிவித்துள்ளது. (இ)

# ஆள் கடத்தலை விசாரிக்க ஆணைக்குழு

ஆட்கள் கடத்திச் செல்லப்பட்டு காணாமற் போகும் சம்பவங்கள்பற்றி ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் ஏ. ஜி. டி. சில்வா தலைமையிலான இந்த ஆணைக்குழுவை ஜனாதிபதி பிரேமதாஸா நேற்று நியமித்தார்.

இனந்தெரியாத குழுக்கள் ஆட்களைக் கடத்திச் செல்வது, கடத்தப்பட்டவர்களின் நிலை, இவற்றைத் தடுக்கும் வழி முறைகள்—

இக் கடத்தல்களில் ஈடுபடுபவர்கள் மீது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள்— ஆகியன குறித்து இந்த ஆணைக்குழு விசாரணை செய்யும் என்று அறிவிக்கப்படுகிறது. (அ-எ)

# கொப்பிகள் எடுத்து வர அரசாங்கம் அனுமதி

யாழ். மாவட்டத்துக்கு அப்பியாசக் கொப்பிகளைக் கொண்டுவருவதற்கு கூட்டுப் படைத் தலைமையகம் அனுமதி வழங்கியுள்ளது.

கொழும்பிலிருந்து அரச அதிபர் நேற்றுக் காலை மேலதிக அரச அதிபருடன் 'வயர்லெஸ்' மூலம் தொடர்பு கொண்டபோது மேற்படி தகவலைத் தெரிவித்தார்.

அரச அதிபர் இது குறித்து கொழும்பில் சம்பந்தப்பட்டவர்களுடன் பேச்சுக்களை நடத்தியதை அடுத்து கூட்டுப் படைத்தலைமையகம் இந்த அனுமதியை வழங்கியுள்ளதாக அறியவந்தது.

இங்குள்ள முகவர்கள் அரச அதிபரின் அனுமதிக் கடிதத்துடன் கொழும்புக்குச் சென்று அப்பியாசக் கொப்பிகளை எடுத்து வர முடியும் என்றும் தெரியவருகிறது.

இதேவேளை—

யாழ் மாவட்டத்தில் கடந்த ஆண்டு (1990) உணவு விநியோகிக்கப்படாத உணவு முத்திரையின் ஆறு புள்ளிகளுக்கும் சேர்த்து இந்த ஆண்டில் உணவு விநியோகத்தை செய்வது குறித்தும் அரச அதிபர் கொழும்பில் பேச்சுக்களை நடத்தி வருவதாக அறியவருகிறது. [5]

# ஈழ அகதிகளை ஏற்க இலங்கை தயாராம்!

கொழும்பு, ஜன. 12

தமிழ்நாட்டில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளைத் திரும்ப ஏற்றுக்கொள்ள இலங்கை அரசு தயாராக உள்ளது.

இத்தகவலை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா நேற்று செய்தியாளர் மாநாட்டில் வெளியிட்டார்.

அகதிகளை மன்னார், பேசாலைப் பகுதிகளில் தங்கவைக்க ஐ. நா. அகதிகள் ஸ்தாபனத்துடன் சேர்ந்து ஏற்பாடுகள் செய்திருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

அரசு சார்பற்ற தொண்டர் நிறுவனங்களும் திரும்பி வரும் அகதிகளுக்கு உதவ முன்வந்திருப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

செய்தியாளர் ஒருவர்:

சண்டை நிறுத்தத்தைக் கைவிட்டு இராணுவத் தாக்குதலைத் தொடர்வதுஎன்று இலங்கை அரசு தீர்மானித்த பிறகு இலங்கைத் தமிழ் அகதிகள் திரும்பி வருவார்கள் என்று நினைக்கிறீர்களா?

அமைச்சர் இக்கேள்விக்குப் பதிலளிக்க முடியாது என்று மறுத்துவிட்டார் என இந்திய வானொலி தெரிவித்தது. (இ-எ)

# கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜன. 12

வலிகாமம் பிரிவுக்குட்பட்ட இணக்கமன்றுகளின் உறுப்பினர்கள் மற்றும் பொறுப்பாளர்களுக்கான விசேட கருத்தரங்கு இன்று சனிக்கிழமை மாலை 3 மணிக்கு கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்தில் நடைபெறவிருப்பதாக இணக்கமன்று பொறுப்பாளர் தெரிவித்தார். [உ-எ]

# சுட்டுக் கொலை

யாழ்ப்பாணம், ஜன. 12

கடந்த செவ்வாயன்று மட்டக்களப்பு நகரத்தில் இராச மாணிக்கம் சின்னமுத்து [வயது 35] என்ற நான்கு பிள்ளைகளின் தாயார் ரெலோ வினரால் சுட்டுக் கொல்லப்பட்டதாக விடுதலைப்புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன. [உ]

# வவுனியா சுகாதார சேவை பணிப்பாளர்

யாழ்ப்பாணம், ஜன. 12

வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக டாக்டர் எஸ். செல்லத்துரை நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னர் பிராந்திய பணிப்பாளராகக் கடமையாற்றிய டாக்டர் மாணிக்கம் ஓய்வு பெற்றதை அடுத்தே இவர் நியமிக்கப்பட்டுள்ளார். [இ-6]

## சுக்லா...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஜனதா தள் கட்சியிலிருந்து பிரிந்து ஜனதா தள் சோஷலிஸ்ட் என்ற ஒரு புதிய கட்சியை உருவாக்கியிருப்பதை ஏற்றுக்கொண்டு சபாநாயகர் தீர்ப்பளித்தார். (உ)

## வவுனியா...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நகர எல்லையில் உள்ள புலிகளின் காவல் அரண்களை நோக்கி முன்னேற முயன்றனர்.

புலிகளின் தற்பாதுகாப்புத் தாக்குதல்களை அடுத்து படையினர் முகாமுக்கு திரும்பிச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

தாண்டிக்குளம், நொச்சி மோட்டைப் பகுதிகளில் ஹெலிக்கொப்டர்களிலிருந்து கலிபர் தாக்குதலும் மற்றும் ஷெல் தாக்குதல்களும் இடம்பெற்றன. (உ)

## பலாலி..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காலை 8 மணியளவில் பலாலி இராணுவத்தினர் சுமார் ஒன்றரை மைல் தூரத்தில் உள்ள புலிகளின் காவல் அரண்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மற்றும் ஷெல் தாக்குதல்களை நடத்தியதில் ஆறு போராளிகள் காயமுற்றனர்

மாவிட்டபுரத்தில் நேற்று நண்பகல் 1. 15 மணியளவில் விடுதலைப் புலிகளின் காவல் அரண் ஒன்றின் மீது படையினர் நடத்திய தாக்குதலில் ஒரு போராளி படுகாயமடைந்தார். (உ)

## இயக்கச்சி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காயமடைந்தனர்.

போர் விமானங்கள் பளைப் பகுதியையும் வட்டமிட்டதால், அங்குள்ள மக்கள் பெரும் அல்லோலகல்லோலப் பட்டனர். பாடசாலை மாணவர்கள் நாலாபுறமும் சிதறி ஓடினர்.

பளையிலுள்ள கடைகள், பாடசாலைகள், அரச அலுவலகங்கள் சந்தை என்பன மூடப்பட்டிருந்ததால், அப் பகுதி எங்கும் வெறிச்சோடிக் காணப்பட்டது. (ஒ-117)

# போக்குவரத்து நேற்று வவுனியாவில் தடை

யாழ்ப்பாணம், ஜன. 12

வவுனியாவில் இடம்பெற்ற அசம்பாவிதங்களை அடுத்து நேற்று வவுனியாப் பகுதியில் போக்குவரத்து தடைப்பட்டது.

வவுனியாவில் இருந்து பயணிகள் வடக்கே வரவில்லை. தாண்டிக்குளம் பகுதியில் இருந்து பயணிகள் அப்பால் செல்லவில்லை.

யாழ். நகரில் இருந்து நேற்று மாலை வவுனியா செல்வதற்காக சங்குப்பிட்டிக்குச் சென்றவர்களில் அனேகர் அங்கு நிலவும் பதற்ற நிலையை அறிந்து திரும்பி வந்து விட்டனர்.

சங்குப்பிட்டியில் நேற்று ஒரு பஸ்கள் வவுனியாவுக்குச் செல்ல பயணிகளுக்காகக் காத்து நின்றபோதும், அவை வவுனியா சென்றனவா என்பது தெரிய வரவில்லை.

# நேற்றைய தாக்குதலில் பொதுமக்கள் காயம்

கட்டுவன், மாவிட்டபுரம், குரும்பசிட்டிப் பகுதிகளில் நேற்று இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதல்களினால் 4 வயதுச் சிறுவன், பெண்கள் உட்பட பல பொது மக்கள் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்களில் அறுவர் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் விவரம் வருமாறு:-

சோ. வைரமுத்து (40 வயது) -புன்னாலைக்கட்டுவன், ஏ. யோகநாதன் (44 வயது)- குரால்த்தை, பி. கலாவதி [30 வயது]- உருமபராய், இந்திராணி [40 வயது]- நவக்கிரி. வி. ஸ்ரீகாந்த் [4 வயது]- இடைக்காடு, ஆர். கொலவிக்கா .22 வயது]- ஏழாலை.

குடியிருப்புப் பகுதிகளை நோக்கி கண்டபடி படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததிலேயே பலரும் காயமுற்றனர்.

இப்பகுதிகளை நோக்கி அடுத்தடுத்து பல ஷெல்கள் ஏவிவிடப்பட்டன. இதனால் வீடுகள் பல சேதமுற்றன.

அரச படைகளின் தாக்குதல் நிறுத்த அறிவிப்பை அடுத்து இப்பகுதிகளுக்குச் சென்றிருந்த மக்கள் நேற்று பீதியால் அங்கிருந்து அவசர, அவசரமாக வெளியேறியபடி இருந்தனர்.

[ஒ-15-68-143-6]

# இந்தியா, இலங்கை கூட்டாக மன்னார் குடாவில் எண்ணெய் வள ஆய்வு

கொழும்பு. ஜன. 12

எண்ணெய் வளத்தைக் கண்டுபிடிப்பதற்காக மன்னார் வளைகுடாவில் கூட்டாக ஆய்வுகளை நடத்த இந்தியாவும் இலங்கையும் ஒப்புக்கொண்டுள்ளன

இத்தகவலை கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவர் நாகேந்திர நாத்ஜா வெளியிட்டார்.

எண்ணெய் வளம் கண்டுபிடிக்கப்படின், உற்பத்தியை இரு நாடுகளும் பகிர்ந்து கொள்ளும் அடிப்படையில் உடன்பாடு காணப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டது. [ஓ-ா]

## வளைகுடாவில் யுத்தம் மூண்டால்

# 1,000 அமெ. வீரர் பலியாவர் 5,000 பேர் காயமடைவர்

வளைகுடாவில் ஒரு யுத்தம் ஏற்படுமானால் அமெரிக்காவின் துரித வெற்றி எவ்வளவு இழப்புக்களுடன் சாத்தியமாகும் என்பது பற்றி அமெரிக்க ஆயுதபடைகள் கமிட்டி மதிப்பீடு ஒன்றை தயாரித்துள்ளது. இந்த 35 பக்க மதிப்பீட்டறிக்கையில் -

★ 500 முதல் 1000 அமெரிக்க வீரர்கள் உயிரிழப்பர்.

★ 3000 முதல் 5000 அமெரிக்க வீரர்கள் காயமடைவர்.

★ இந்த யுத்தத்தில் 10 ஆயிரம் முதல் 20 ஆயிரம் வீரர்களை இழப்பதுகூட ஒரு சிறிய அம்சமாக இருக்கும்.

இப்படி கமிட்டித் தலைவர் லெஸ் அஸ்பின் தெரிவித்திருக்கிறார்.

வளைகுடாவில் அமெரிக்க மற்றும் நேச நாட்டுப் படைகளிடம் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட யுத்த விமானங்கள் ஆயத்த நிலையில் உள்ளன.

இவை ஈராக்கின் விமானப் பாதுகாப்புக்களை மூன்று தாக்குதல்களில் அழித்து விடும் என்று அமெரிக்க தரப்பினர் மதிப்பிட்டுள்ளனர். இத் தாக்குதலின் பின்னர் ஈராக்கின் விமானப்படை செயற்பட முடியாத நிலையில் இருக்கும் என்று யுத்த நிபுணர்கள் கருதுகின்றனர்.

ஈராக்கிடம் குறைந்தது 19 ரக போர் விமானங்கள் உள்ளன. இவற்றில் ஒன்று மிக் 29 ரக விமானமாகும்.

வளைகுடாவில் 6 லட்சத்து 5 ஆயிரத்துக்கு மேற்பட்ட அமெரிக்க நேச நாட்டுத் துருப்புக்கள் ஈராக்கின் 5 லட்சத்துத்து 40 ஆயிரம் படையினரை எதிர்நோக்கி உள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது. (இ-எ)

# வெளிநாட்டிடம் கெஞ்சுவதா; அதைவிடபழையபாண்நல்லது

## பாகிஸ்தான் பிரதமர் கூறுகிறார்

இஸ்லாமபாத், ஜன. 12

வெளிநாட்டு உதவிக்காக இரந்து கெஞ்சுவதிலும் பார்க்க பழைய பாணைத் தின்று வாழ பாகிஸ்தானியர்கள் தயாராக இருப்பதாக பிரதமர் நவாஸ் ஷெரிப் தெரிவித்திருக்கிறார்.

பஞ்சாபில் தெவல்பூர் என்னுமிடத்தில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையில் பாகிஸ்தான் பிரதமர் இப்படிச் சொன்னார்.

இஸ்லாமபாத்துக்கு அருகில் இரகசிய அணு உலை ஒன்று இருப்பதை பரிசோதனை செய்ய அனுமதிக்க வேண்டும் என்ற வெளிநாட்டு நிர்ப்பந்தத்திற்கு பாகிஸ்தான் பணியாது என்றும் பிரதமர் ஷெரிப் சொன்னார்.

அணு உலையைப் பார்வையிட பாகிஸ்தான் அனுமதி மறுத்ததைத் தொடர்ந்து அமெரிக்கா பாகிஸ்தானுக்கான இராணுவ மற்றும் பொருளாதார உதவிகளை நிறுத்திய பின்னர் பிரதமர் ஷெரிப் வெளியிட்ட கடுமையான பேச்சாக இது கருதப்படுகிறது. (இ-எ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

இரும்புக்கிறில்கள் [Grills], இரும்புக் கதவு திறந்து மூடக் கூடியது. [கடைகளுக்கு உகந்தது] மற்றும் பலகைத் தீராந்திகள் உடன் விற்பனைக்கு உண்டு. 37/1, கச்சேரி நல்லூர் வீதி, சுண்டுக்குளி. [15393]

வர்த்தகமும் நிதியும் [உயர்தர வகுப்புகளுக்குரியது] உள்நாட்டு வியாபாரம், வெளிநாட்டு வியாபாரம், உற்பத்தி வர்த்தகத்துடன் தொடர்புடைய நிறுவனங்கள், சந்தைப்படுத்தல் ஆகியன வற்றுடன் வெளிவந்து விட்டது. தொகுப்பு; தேவராஜன், ஜெயராமன் B. Com [Hons] விலை ரூபா 48/- வெளியீடு விற்பனை பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். [சி-5583]

### மலிவு விற்பனை

விட்டுத் தளபாடங்கள், எவர்சில்வர் பாத்திரங்கள், T. V., றேடியோ, றைஸ் குக்கர் முதலிய உபகரணங்கள் விற்பனைக்கு உண்டு. கம்பன் கோட்டத்திற்கு அருகில் 149/1, கோவில் வீதி, நல்லூர். (15493)

### அச்சுக்கூடம்

அச்சுக்கூடப் பாவனைக்குரிய பேப்பர் கட்டிங் மெஷின் உடன் தேவை. விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். 342, பருத்தித்துறை வீதி, சட்டநாதர் கோவிலடி, யாழ்ப்பாணம். [C/5635]

### தவறிவிட்டது

K. R. பத்மநாதன் ஆகிய நான் உடுப்புகளும் சாமான்களும் அடங்கிய மண் நிறமுடைய [Travelling Bag] கொழும்பிலிருந்து கேரதீவுக்கு வரும் படகுக்குள் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ் வரும் விலாசத்தில் ஒப்படைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். தகுந்த சன்மானம் தரப்படும். பாலா ஸ்கூட்டர் வேக்ஸ், 182, ஸ்டான்லி றோட், யாழ்ப்பாணம். (15213)

### போட்டோஸ்ரற் பிரதிகள்

யாழ். பஸ்நிலைய முன்பாக சன்லைற் றைக்கிளீனர்ஸ் ஸ்தாபனத்தில் தரமான போட்டோஸ்ரற் பிரதிகளை உடனுக்குடன் பெற்றுக் கொள்ளலாம். வேலைநேரம் காலை 8 30 — மாலை 5-30. [சி/5639]

### மீரா வெளியீடு "அக்கினி"

மண்மீட்பு, சமூகமீட்பு குரல்கள் ஓங்கி ஒலிக்கும் இன்றைய காலகட்டத்தில் வெளிவந்திருக்கும் சமூகநாவல் செங்கை ஆழியானின் "அக்கினி" துர்க்கா ஸ்ரேசனேர்ஸ் சுன்னாகம், திருக்கணிதம் சாவகச்சேரி, ஸ்ரீகாந் புத்தகசாலை, நல்லூர். (15475)

### மணமகள் தேவை

தாரமிழந்த 46 வயதுடைய தனியார் நிறுவன ஆங்கில ஆசிரியருக்கு (குடி, புகை பழக்கமற்றவர்) நல்ல குணமான மணமகள் தேவை. விதவைகளும் விரும்பத்தக்கது. Master 13/110. Orugodawatta, Avissawalla Road, Wellampitiya. [15458]


### திருமண சேவை

டாக்டர், கணக்காளர், வங்கி ஊழியர்கள், தபால் பியோன் ஆகியோர்களது குறிப்புகள் உண்டு. தொடர்பு சுவாமியார் இராசகுலசிங்கம் 53/5 அன்னசத்திரஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (15468)

### பரீட்சை (ஆண்டு 5)

புதிய கல்விநிலைய புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை 13 - 01 - 91 ஞாயிறு மு.ப. 8-00, மு.ப.10-30மணி நேரங்களில் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில் நடைபெறும். பி. ப. 1-00 மணிக்கு மக்கள் வைத்தியசாலை முன்பாக கொக்குவில் மேற்கு (ஆனைக்கோட்டை குளப்பிட்டி றோட்) நடைபெறும். பதிவு செய்யவும். [15474]

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



கரம்பொன்னைச் சேர்ந்த
ச. வஸ்தியாம்பிள்ளை
(இளைப்பாறிய ஆசிரியர்)
பிறப்பு: 15 - 10 - 1916 இறப்பு: 14 - 12 - 1990
மேரி திரேசா வஸ்தியாம்பிள்ளை
பிறப்பு: 26 - 05 - 1924 இறப்பு: 15 - 12 - 1990

இவர்களின் மரணச்சடங்குகளிலும், நல்லடக்கத்திலும் கலந்து தங்கள் அனுதாபங்களைத் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், நல்லடக்க ஆராதனையை நிறைவேற்றிவைத்த அருட்திரு S. F. கிருபானந்தன் அடிகளாருக்கும் எமது தாழ்மையான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவர்களின் பிரிவால் துயருறும்,
பெறாமக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

N. J. விஜயரெட்ணம்
இல. 3, மூன்றாம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். (15470)

THE EXPRESS INSTITUTE KOPAY
A BOON TO STUDENTS

1989 O/L பரீட்சையில் தவறிய மாணவருக்கு ஓர் அரிய வாய்ப்பு!

## O/L 1991 விஷேட பரீட்சைக்கான

## பகல் முழுநேர வகுப்பு
(காலை 8.00 - பி.ப 1.00)

தை 07 இல் ஆரம்பமாகி நடைபெறுகிறது.

இவ் வகுப்பு மாணவர்களும் கணித ஆசிரியர் திரு. வரதராஜனின் விசேஷ கணித (மீட்டல்) வகுப்பில் இலவசமாக கல்வி கற்க முடியும்.

(15486)

# BECON
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## பொருளியல் - வரதராஜன்

## A/L 90, 91 DAY CLASSES

| | | |
|---|---|---|
| திங்கள் | 8.00 - 9.30 | செலவுமதி நிலுவை |
| புதன், வெள்ளி | 8.00 - 9.30 | இலங்கைப் - பொருளாதாரம் |
| வியாழன் | 9.00 - 10.00 | பொருளியல் பகுதி I |
| செவ்வாய் | 9.00 - 10.00 | வினா - விடை வகுப்பு |

## A/L 91 வார இறுதி வகுப்பு

ஞாயிறு — 8.00 அரசாங்க வரவு செலவுத்திட்டம்
திங்கள் — 2.15 தேசிய வருமானம்

## A/L 92 வார இறுதி வகுப்பு

பிரிவு I ஞாயிறு 10 - 11, திங்கள் 3 - 4 — அடிப்படைப் பொருளாதார பிரச்சினைகள்
பிரிவு II சனி 2.30 - 3.30, ஞாயிறு 7.00 - 8.00 — உற்பத்தி சாத்திய வளை கோடு

ஆரம்பம்

DAY CLASS 11 - 01 - 91 வெள்ளி 8.00 a. m.

வார இறுதி வகுப்பு 13 - 01 - 91 ஞாயிறு 8.00 a. m.

[சி-5625]

# 2 ஆவது நினைவு தினம்

தோற்றம்: 1917 - 09 - 27

மறைவு: 1989 - 01 - 12



## அமரர் M. C. சுப்பிரமணியம்

"நலிந்தோர் நல்வாழ்வுக்காய் உழைத்திட்டாய்
நானிலமே போற்றிட வாழ்ந்திட்டாய்
நல்லவர்கள் தோழமை பல பூண்டிட்டாய்
நலிந்தோர் உயர்வு கண்டு இன்புற்றாய்"

ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

21/1, கலைப்புலவர் வீதி,
யாழ்ப்பாணம். (15492)

# இராம சேவையாளர்களிடம் பயிர்ச்செய்கை அலுவலர் கடமையும்

யாழ். மாவட்டத்தில் உள்ள இராமசேவை அலுவலர்களை பயிர்ச்செய்கை அலுவலர்களாகவும் கடமையில் ஈடுபடுத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொண்டுள்ளன.

இது சம்பந்தமான சுற்றறிக்கை அரசாங்கத்தால் அனுப்பப்பட்டுள்ளது.

இதனை நடைமுறைப்படுத்துவது சம்பந்தமான அவசிய நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தத் தகவல்களை கமநல சேவைத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

முன்னர் கமநல சேவைத் திணைக்களத்தின் கீழ் உள்ள கமநல சேவை நிலையங்களில் பயிர்ச் செய்கை உத்தியோகத்தர்களாகக் கடமையாற்றிய பலர் கிராம சேவையாளர்களாக நியமிக்கப்பட்டனர்.

இதனை அடுத்து ஏற்பட்ட வெற்றிடம் காரணமாக திணைக்களச் சேவையை விவசாயிகள் பெற்றுக் கொள்வதில் கஷ்டநிலை ஏற்பட்டது.

இதனை அடுத்தே இந்த முடிவுஎடுக்கப்பட்டன. (இ-6)

## நன்றி

06 - 01 - 91 அன்று தவறிய எனது முக்கிய ஆவணங்கள் அடங்கிய ரவலிங்பாக்கை தெல்லிப்பளை மக்கள் முன்னணிப் பொறுப்பாளர் சம்பந்தப்பட்ட சைக்கிளோட்டியிடம் இருந்து மீட்டுத் தந்தமைக்கு எனது நன்றிகள்.

அருட் சகோதரி
இரேசிற்றா.
(15496)

## St. Patrick's College, Jaffna

### WANTED

Temporary Teacher for Advanced Level Botany.

Apply giving particulars before 18th January 1991.

RECTOR

[C/5640]

# யாழ். மத்திய கல்லூரி
## ஆண்டு 6 இல் அனுமதி பெறுவதற்கான விண்ணப்பம் 1991

மேற்படி விண்ணப்பங்கள் கல்லூரி அலுவலகத்தில் 30-01-1991 வரை பெற்றுக் கொள்ளப்படும். விரும்பியோர் உரிய தகைமைகளுடன் புத்தகசாலைகளில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று ரூபா பத்துடன சமர்ப்பிக்கும்படி வேண்டப்படுகின்றனர். பரீட்சைத் திகதி, விண்ணப்பம் அனுப்பியோருக்குத் தனித்தனி பின்னர் அனுப்பி வைக்கப்படும்.

நா. க. சண்முகநாதபிள்ளை
அதிபர்.

[15497]

# கலை வர்த்தகக் கல்லூரி
## (C. C. A.)
(வெலிங்டன் சந்தி அருகாமை)

92 பிரிவு 2 SAT, SUN CLASSES
ஆரம்பம்: 13 - 01 - 1991 8.00 a.m.

91 Day Classes
ஆரம்பம்: 16 - 01 - 1991 8.00 a.m.

[சி-5603]

## O/L மீட்டலுடன் வினா-விடை வகுப்புக்கள்

நடைபெறவேண்டிய பரீட்சைக்கான சகல பாடங்களும் ஆரம்பமாகின்றன;
பிரிவு I — 8 30 — 1 00
பிரிவு II — 3.00 — 5.30

ஆரம்பம் : 1991 - 01 - 16

BONDS INSTITUTES
58 A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். [15489]

## A/L 92

| | | |
|---|---|---|
| CHEMISTRY | — | திரு. மகாதேவா |
| PHYSICS | — | திரு. கிருணசன் |
| BOTANY | — | திரு. ஸ்ரீகரன் |
| ZOOLOGY | — | திரு. மதவா |
| PURE/APP. | — | திரு. மகேஸ்வரன் |

ஆரம்பம் : 13 - 1 - 91

BOND INSTITUTES
58 A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (15490)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org